
Name: ______________________________ Marks : ______/20

Class : ______ Parent's Signature : ____________________

Date :

Duration : 40 min

கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு 60 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதவும் . படத்தின் அடியில் உதவிச் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன . அவற்றைக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளவும் .



| | |
|---|---|
| விளையாட்டுத் திடல் | வாய்ச்சண்டை |
| மணல் படுக்கை | தீய சொற்களை |
| சறுக்கு விளையாட்டு | கைச்சண்டையாக மாறியது |
| தன்னுடைய முறைக்காக | உருண்டு புரண்டனர் |
| ஏற்கனவே காத்துக் கொண்டு | இருவரின் பெற்றோரும் |

# PRIMARY SCHOOL

## SECOND SEMESTRAL ASSESSMENT 2 - 2013

## TAMIL LANGUAGE

## PAPER 2

## PRIMARY 3

பெயர்: ______________________

வகுப்பு: P 3 ________________

தேதி : ______________________

பெ.கை.: ____________________

| |
|---|
| |

ஆசிரியர்க் குறிப்பு:

______________________________________

______________________________________

______________________________________

1. <u>வேற்றுமை ( 8 மதிப்பெண்கள் )</u>

**கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.**

ஒரு காட்டில் நரி ஒன்று வாழ்ந்து வந்தது. அது பல இடங்களில் (1) ____________ தேடி அலைந்து திரிந்தது. அதற்குரிய சிறிய மிருகம் எதுவும்

கிடைக்கவில்லை. நரி (2) ______________ மலைப்பகுதிக்கு வந்தது. அங்கு (3) ____________ செம்மறியாடுகள் கூட்டமாக மேய்வதைக் கண்டது. (4) ________________ சந்தோஷம் தாங்க முடியவில்லை. நரி மெதுவாகச் சென்று கொண்டிருந்தது. அதற்குள் செம்மறியாடுகள் நரியைப் பார்த்துவிடவே, அவை தப்பித்துக் கொண்டன.

1. (1) இரைக்கு
   (2) இரையை
   (3) இரையின்
   (4) இரையோடு ( )

2. (1) கவலையின்
   (2) கவலைக்கு
   (3) கவலையை
   (4) கவலையுடன் ( )

3. (1) ஓரிடத்தில்
   (2) ஓரிடத்தை
   (3) ஓரிடத்திற்கு
   (4) ஓரிடத்தின் ( )

4. (1) நரியை
   (2) நரிக்கு
   (3) நரியின்
   (4) நரியோடு ( )

## 2. செய்யுள் (10 மதிப்பெண்கள )

**பின்வரும் செய்யுள் பழமொழிகளில் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு ஏற்ற சொல்லைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.**

5. வைகறை ________________ எழு.

   (1) கயல்
   (2) துயில்
   (3) துகில்
   (4) மயில் ( )

6. ________________ ஒழியேல்.

   (1) ஊக்கமது
   (2) உடையது
   (3) ஒப்புரவு
   (4) ஓதுவது ( )

7. ஏற்பது ______________ .

   (1) மகிழ்ச்சி
   (2) இகழ்ச்சி
   (3) ஒழியேல்
   (4) மறவேல் ( )

8. ஐயம் ________________ உண்.

(1) கொடுத்து
(2) ஈட்டி
(3) இட்டு
(4) இரந்து ( )

9. தந்தை ________________ பேண்.

(1) சேய்
(2) தாய்
(3) தங்கை
(4) அன்னை ( )

3. முன்னுணர்வுக் கருத்தறிதல் ( 8 மதிப்பெண்கள் )

பின்வரும் பகுதியில் 4 கோடிட்ட இடங்கள் உள்ளன. அவற்றை நிரப்புவதற்கு அடியில் கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.

| | |
|---|---|
| அன்று பள்ளி விடுமுறை. தேவன் தன் (10) ______________ பூங்காவிற்குச் சென்றான். அங்கே சிலர் (11) ____________ செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் ஒன்றாகக் கைகளையும் (12) ______________ அசைத்துக்கொண்டிருந்தார்கள். தேவன் அதை (13) ____________ பார்த்துக்கொண்டிருந்தான். அவன் தன்னை மறந்து அவர்களோடு உடற்பயிற்சி செய்யத் தொடங்கினான். அப்போது அவன் நாய் வேறு இடம் சென்றதை, அவன் அறியவில்லை. | 10 (   )<br>11 (   )<br>12 (   )<br>13 (   ) |

| | |
|---|---|
| 1. நாயுடன் | 2. கால்களையும் |
| 3. வேடிக்கை | 4. மெதுவோட்டம் |
| 5. குச்சிகளையும் | 6. தம்பியுடன் |
| 7. படம் | 8. உடற்பயிற்சி |

## 4. தெரிவுவிடைக் கருத்தறிதல் ( 10 மதிப்பெண்கள் )

பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப்படி.

ஒரு சமயம் இடையன் தன் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான். அப்போது ஒரு சிறிய மான் குட்டி வழி தவறி வந்துவிட்டது. இடையன் அதை வீட்டிற்குத் தூக்கி வந்தான். அவன் வீட்டில் இரண்டு நாய்கள் இருந்தன. அவைதான் ஆடுகளைப் பத்திரமாகக் காவல் காத்து வந்தன. மான் குட்டியைப் பார்த்ததும் நாய்களின் நாக்கில் நீர் ஊறிற்று. அதைக் கண்ட இடையன், "ஆடுகளைப் போலதான் இதையும் பத்திரமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். நான் இல்லாத சமயம் மானுக்கு ஏதேனும் நேர்ந்தால் உங்களைக் கொன்று விடுவேன்" என்று பயமுறுத்தினான்.

இடையன் தன் குடிசையைச் சுற்றி ஒரு வேலி போட்டு எக்காரணம் கொண்டும் அதை மான்குட்டி தாண்டக்கூடாது என்று எச்சரிக்கை செய்திருந்தான். தன் எசமானன் கூறியபடி நாய்கள் மான் குட்டியிடம் அன்புடன் பழகி வந்தன. மான் குட்டியும் நாய்களுடன் சேர்ந்து விளையாடும். அது தன்னையும் ஒரு நாயாகவே கருதிக் கொண்டது. நாய்கள் அடிக்கடி வெளியே சென்று ஊர் சுற்றிவிட்டு வரும். ஒருநாள் நாய்கள் இல்லாத சமயத்தில் அதுவும் வேலியைத் தாண்டி வெளியே வந்தது.

அந்த இடத்தில் தெரு நாய்கள் சில, ஒன்றுகூடி குரைத்துக் கொண்டிருந்தன. நாய்களோடு பழகிய மான் பயப்படாது அருகில் சென்றது. எல்லா நாய்களும் சேர்ந்து மான் குட்டியைக் கடித்துக் கொன்றன.

**பின்வரும் வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் ஏற்ற மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.**

14. இடையன் எதை வீட்டிற்குத் தூக்கி வந்தான் ?

(1) நாய்களை

(2) மான் குட்டியை

(3) ஆடுகளை

(4) மிருகங்களை ( )

15. எவை ஆடுகளைக் காவல் காத்து வந்தன ?

(1) வழி தவறிய நாய்கள்

(2) தெரு நாய்கள்

(3) மான் குட்டி

(4) அவன் வீட்டு நாய்கள் ( )

16. இடையன் நாய்களுக்கு இட்டக் கட்டளை என்ன ?

(1) மான் குட்டியைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்வது

(2) மான் குட்டியைப் பத்திரமாக வேலியைத் தாண்டச் சொல்வது

(3) ஆடுகளைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்வது

(4) தெரு நாய்களைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்வது ( )

17. மான் குட்டி ஏன் தன்னையும் நாய் என எண்ணிக்கொண்டது ?

(1) நாய்களுடன் சேர்ந்து ஆடுகளை மேய்த்ததால்

(2) இடையன் அதை அவ்வாறு கருதச் சொன்னதால்

(3) நாய்களுடன் சேர்ந்து விளையாடியதால்

(4) தெரு நாய்களுடன் விளையாடியதால் ( )

18. மான் குட்டி எப்போது வேலி தாண்டியது ?

(1) இடையன் வீட்டில் இல்லாதபோது

(2) தெரு நாய்கள் குரைத்தபோது

(3) மான் குட்டிக்குப் பசி எடுத்தபோது

(4) நாய்கள் வீட்டில் இல்லாதபோது ( )

## 5. சுயவிடைக் கருத்தறிதல் (9 மதிப்பெண்கள்)

**பின்வரும் கதையைக் கவனமாகப் படி. கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுது.**

ஒரு காட்டில் சிங்கம், குதிரை, யானை, நரி, வண்ணத்துப்பூச்சி, எறும்பு ஆகியவை வாழ்ந்து வந்தன. அவை அனைத்தும் ஒன்றுகூடி தங்களுடைய பெருமைகளைப் பேசிக்கொண்டிருந்தன. குதிரை சிங்கத்திடம், "நான் வேகமாக ஓடுவேன். யாராலும் என்னைப் பிடிக்க முடியாது", என்றது. "என்னைப் பார். யாராவது என்னைத் தாக்க வந்தால் நான் அவர்களை என் பலத்தால் தாக்குவேன்", என்றது யானை. "நான் எந்த நேரத்திலும் என் அறிவைத் தந்திரமாகப் பயன்படுத்துவேன், தெரியுமா?" என்றது நரி. "இது ஒன்றும் பெரிதல்ல. என்னைப் பார். நான் அழகாக இருக்கிறேன். அது மட்டுமா? நான் நன்றாகப் பறப்பேன். என்னைப் பார்த்தால் எல்லாரும் மகிழ்ச்சி அடைவார்கள்", என்றது வண்ணத்துப்பூச்சி. ஆனால், எறும்பு மட்டும் அமைதியாக இருந்தது.

கோபமடைந்த சிங்கம் பயங்கரமாக முழங்கியது. குதிரையும், யானையும், நரியும் தப்பிக்கப் பார்த்தன. ஆனால், வண்ணத்துப்பூச்சி மட்டும் தெரியாமல் சிங்கத்தின் வாயில் சிக்கிவிட்டது. அப்போது எறும்பு அதன் வாலைக் கடித்துவிட்டது. சிங்கம் வாயைத் திறந்து வலியால் கத்தியது. உடனே சிங்கத்தின் வாயிலிருந்து வண்ணத்துப் பூச்சி வெளியில் குதித்தது. அப்பொழுதுதான் குதிரை, யானை, நரி, வண்ணத்துப்பூச்சி ஆகியவை எறும்பின் பலத்தைத் தெரிந்துகொண்டன.

வினா

19. மிருகங்கள் ஒன்று கூடி என்ன செய்தன? (1 மதிப்பெண்)

20. குதிரையை ஏன் பிடிக்க முடியாது? (2 மதிப்பெண்கள்)

21. நரி எப்படிப்பட்ட மிருகம்? (2 மதிப்பெண்கள்)

22. வண்ணத்துப்பூச்சிக்கு என்ன ஏற்பட்டது? (2 மதிப்பெண்கள்)

23. சிங்கம் ஏன் கத்தியது? (2 மதிப்பெண்கள்)

P3

TESTPAPER 11

1. 2 2. 4 3. 1 4. 2

5. 2 6. 4 7. 2 8. 3 9. 2

10. நாயுடன் 11. உடற்பயிற்சி 12. கால்களையும் 13. தம்பியுடன்

14. 2 15. 4 16. 1 17. 3 18. 4

19. மிருகங்கள் ஒன்று கூடி தங்களுடைய பெருமைகளைப் பேசிக்கொண்டிருந்தன.

20. குதிரை வேகமாக ஓடும். அதனால் அதைப் பிடிக்க முடியாது.

21. நரி தந்திரமாகத் தன் அறிவைப் பயன்படுத்தும் மிருகம்.

22. வண்ணத்துப்பூச்சி சிங்கத்தின் வாயில் சிக்கிக் கொண்டது.

23. எறும்பு சிங்கத்தின் வாலைக் கடித்ததால் சிங்கம் கத்தியது.